முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை

முன்னிலை  திருமதி பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,

முதன்மை சார்பு நீதிபதி

ம.சா. 1 நாள்.17.07.2023

| MCOP No. | 57/2022 | | |
|---|---|---|---|
| பெயர் | அன்பு செல்வன் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து ஏற்படுத்திய வாகனம் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்றால் சரிதான். வாகனத்தின் பதிவு சான்றும் 1ம் எதிர்மனுதாரரின் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். மோட்டார்வாகன ஆய்வறிக்கையிலும் 1ம் எதிர்மனுதாருக்கு சொந்தமானது என்று உள்ளது என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரர் ஏற்கனவே வாகனத்தை 1ம் எதிர்மனுதாரரிடம் விற்றுவிட்டபடியால் 2ம் எதிர்மனுதாரருக்கும் இந்த வழக்கு விபத்திற்கும் எந்தவித் தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. விபத்து காலத்தில் 2ம் எதிர்மனுதாரர் பெயரில் காப்பீடு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல.

3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தேன். நான் கிழக்கில் இருந்து மேற்கு நொக்கி வந்து கொண்டிருந்தேன். எதிரே வந்தது வண்டி இருசக்கர வாகனம் ஆகும். அது மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்து கொண்டிருந்தது. நான் ரோட்டின் தென்னான்ட பக்கமாக சென்று கொண்டிருந்தேன். எதிர் திசையில் இருந்து வந்த மோட்டார் சைக்கில் தென்னான்ட பக்கமாக வந்து கொண்டிருந்தது. எனக்கு ஓட்டுநர் உரிமம், மற்றும் எனது வாகனத்திற்கு காப்பீடும் இல்லை. நான் விபத்து சமயத்தில் தலைகவசம் அணிந்திருந்தேன் ஆனால் அதற்கு பேல்ட்டு போடவில்லை. அது விபத்து சம்யத்தில் கிழன்டு விழுந்துவிட்டது. நான் தலைகவசம் அணியவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு காலில் ஏற்பட்ட எலும்பு முறிவு மற்றும் தலையிலும், ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. தலையில் சி.டி ஸ்கேன் எடுத்ததில் மூளையில் எந்த அடியும் ஏற்படவில்லை என்று அறிக்கை வந்தது. ம சா ஆ 8, 9 ஆவணங்கள் இரண்டும் எலும்பு முறிவிற்காக எடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு காலில் எலும்பு முறிவு

ஏற்பட்டதற்கு தான் முக்கியமாக சிகிச்சை அளிக்கப்பட்டது. எனக்கு வலது காலின் எலும்பு முறிவு தவிர வேறு எங்கும் எலும்பு முறிவு ஏற்படவில்லை. மற்ற உடல் பகுதியில் எந்த உபாதையும் இல்லை என்றால் தலை சுற்றுகிறது. தலை சுற்றளலுக்கு நான் எந்த சிகிச்சையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஒரு காலுக்கு மட்டும் ஏற்பட்ட எலும்பு முறிவிற்கு 50 சதவீதம் ஊனம் கொடுத்துள்ளது தவறு என்றால் சரியல்ல. எலும்வு சேர்ந்துவிட்டது. ஆனால் நடப்பதில் சிரமம் உள்ளது. எனக்கு காலில் உயரத்தில் ஏற்ற குறைவு உள்ளது அதுபோல் மருத்துவ அறிக்கையில் சொல்லப்படவில்லை. எவ்வளவு உயரத்திற்கு ஏற்ற குறைவு உள்ளது என்பதும் சொல்லப்படவில்லை. இந்த காயத்திற்கு 20 சதவீதம் தான் அதிகபட்சமாக ஊன சதவீதம் கொடுக்க முடியும் என்றால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் எனக்கு ஒட்டுநர் உரிமம் கொடுக்கப்படவில்லை என்று சொல்லியுள்ளது என்றால் சரிதான். அது எ ம சா ஆ 1 ஆகும். ம சா ஆ 6ல் சி.டி மற்றும் எம்.ஆர்.ஐ ஸ்கேன் எடுத்தாக பில் உள்ளது ஆனால் அதன் அறிக்கையை தாக்கல் செய்யவில்லை. எக்ரோ எடுத்தற்கான அறிக்கை தாக்கல் செய்யவில்லை. ம சா ஆ 6ல் ரூ.450, 732 தொகை உள்ளதற்கான பில்களில் தொகை செலுத்தப்பட்டதற்கான குறிப்பு இல்லை என்றால் சரியல்ல. சில் பில்களில் எனது பெயர் இல்லை என்பதால் அவற்றை ஏற்றுக் கொள்ள முடியாது என்றால் சரியல்ல. நான் தான் சரியான திசையில் செல்லாமல் விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. எனது அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்றும், அதனால் 3ம் எதிர்மனுதாரர் எந்த வித இழப்பீடும் கொடுக்க இயலாது என்றாலும் சரியல்ல.